**கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்**

நாள் 12.03.2026

அசல் வழக்கு எண்.326/2023

பி.சா.2 கனகா, க/பெ.ஏகாம்பரம்

சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

## குறுக்கு விசாரணை

என்ன வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சர்வே நம்பர் தெரியுமா என்றால் தெரியாது எவ்வளவு பரப்புக்கு பாகம் கேட்கப்பட்டுள்ளது என்றால் மொத்தம் 74 சென்டில் எங்களுக்கு 18 சென்ட் வேண்டும் என்று கேட்கிறோம். மீதம் இருக்கும் பாகத்தினை குமாரி மற்றும் செல்வம் என்பதற்கு பிரித்துக் கொடுத்து விடலாமா என்றால் சரிதான். நீங்கள் உங்கள் மாமனார் சொத்தில் பாகம் வேண்டும் என்று எதிர் வழக்கு தாக்கல் செய்து உள்ளீர்கள் என்றால் சரிதான் மாமனார் உயிருடன் இருக்கிறார் என்றால் சரிதான் அவரை ஏன் வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் பூர்வீக சொத்து என்று சேர்க்கவில்லை. உங்கள் நாத்தனார் பெயர் என்னவென்றால் லட்சுமி ஆகும் மற்றொருவர் பெயர் சாந்தி ஆகும். அவர்களை ஏன் வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை ஏன் என்றால் தெரியாது. வக்கீல் அவர்களிடம் சொல்லி உள்ளேன் தமிழ் படிக்க தெரியுமா என்றால் தெரியாது. நாத்தனாருக்கும் மாமனாருக்கும் பாகம் கொடுக்க வேண்டுமே என்று நீங்கள் கேட்டீர்களா என்றால் கேட்கவில்லை. வழக்கு சொத்து உன் மாமனார் அப்பா நடேச முதலியார் என்பவருக்கு சொந்தமானது என்றால் சரிதான். நடேஷ் முதலியாருக்கு முருகேஷ் முதலியார் அதாவது உங்கள் மாமனார் மட்டுமே ஒரே வாரிசு என்றால்

சரிதான் உடன் பிறந்தவர்கள் வேறு யாரும் இல்லை என்று சொன்னால் சரிதான். நடேசன் முதலியார் எந்த வருடம் இறந்தார் தெரியுமா என்றால் தெரியாது. நடேச முதலியார் 1964 ஆம் ஆண்டு இறந்துவிட்டார் அவர் உங்கள் கணவர் பிறப்பதற்கு முன்பே இறந்து விட்டார் என்றால் அது பற்றி தெரியாது. குடும்பத்தில் உள்ள பங்காளிகள் சொந்தங்களை பற்றி கேட்டு தெரிந்து கொண்டீர்களா என்று தெரிந்து கொண்டேன். உங்களுக்கு திருமணம் ஆகி எத்தனை ஆண்டுகள் ஆகிறது என்றால் 16 ஆண்டுகள் ஆகிறது. வழக்கு சொத்து மொத்தமும் நடேஷ் முதலில் யார் சொத்து என்று சொன்னால் பூர்வீக சொத்து என்று சொன்னார்கள் பேரனுக்கு பாகம் உண்டு நடேச முதலியாருக்கு சொந்தமான சொத்து முருகேசன் முதலியார் ஒரே பிள்ளை என்பதால் அவருக்கு சொந்தமான சொத்து என்று சொன்னால் சரி இல்லை மற்றவர்களுக்கு பாகம் இல்லை என்று சொன்னால் சரி இல்லை. உங்கள் கணவரோ நீங்களோ அரசாங்க ரெக்கார்டு ஏதேனும் பார்த்து உள்ளீர்களா என்றால் இடம் மட்டும் காட்டினார்கள் ஆவணங்கள் காட்டவில்லை. முருகேச முதலியாருக்கு அப்பா மூலமாக கிடைத்த சொத்து எனவே அது அவரது தனிப்பட்ட சொத்து என்று அவரது மனைவிக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் தெரியுமா என்றால் தெரியாது . குமாரி என்பவருக்கு தாய் வீட்டு சொத்து ஆகவே நீங்கள் அதில் பாகம் எதும் கேட்க முடியாது என்றால் சரி இல்லை.குமாரி என்பவர் வழக்கு தாக்கல் செய்து அவரது சகோதரன் பார்த்தசாரதியிடமிருந்து 37 சென்ட் பாகம் பெற்றார் என்றால் அது பற்றி தெரியாது பார்த்தசாரதி என்பவரது வாரிசுகள் உங்கள் கணவர் ஏகாம்பரம் என்பவருக்கும் மைத்துனர் செல்வம் என்பவருக்கும் தலா 18 சென்ட்

**எழுதி உள்ளார்கள் என்றால் சரிதான் .உங்கள் மாமனார் சொத்தில் உங்களுக்கு பாகம் கிடையாது என்று சொன்னால் சரியில்லை.**

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed to the witness and acknowledged by him / her to be correct.

Additional Subordinate Judge,
Kancheepuram.